சாட்சிகளின் வாக்குமூலம்
பாகம் III சுற்றறிக்கை உத்தரவு 2 (I) உ.வி.மு.ச.
பிரிவு 1 மற்றும் உ.வி.மு.ச.
**அ.வ.எண். 76/2015**
மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பல்லடம்
வாக்குமூலம் – பி.வா.சா–1

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | விஜயகுமார் | மதம் | : | |
| த/க/பெ. | : | | தொழில் | : | |
| கிராமம் | : | | வயது | : | |
| தாலுகா | : | பல்லடம் | மாவட்டம் | : | திருப்பூர் |

1987ம் வருடத்திய வகைமுறைச்சட்டம் பிரிவு 10ன்படி சாட்சி அழைக்கப்பட்டு அங்கனமே உள்ளார்ந்த உறுதி உரை செய்யப்பட்டு 2025ஆண்டு ஆகஸ்ட் மாதம் 1ம் நாள் சாட்சியம்.

---

**முதல் விசாரணை**

நான் இவ்வழக்கில் 3ம் பிரதிவாதி ஆவேன். என்னுடைய முதல் விசாரணையை நிரூபண வாக்கு மூலமாக தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள சங்கதிகள் எனக்கு தெரியும், படித்துப்பார்த்து தான் கையெழுத்து போட்டேன். அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். கீழ்க்கண்ட ஆவணங்கள்

1. 09.06.1945 தேதியிட்ட பிரதிவாதிகளின் மூதாதையரான பாட்டே கவுண்டர், பொன்னியகவுண்டர், ராயப்பகவுண்டர் ஆகியோருக்கிடையேயான பாகசாசன ஆவணத்தின் சான்றிட்ட நகல். (ஆவண எண்.1040/1945)
2. 16.05.1946 தேதியிட்ட நஞ்சப்பகவுண்டர் பெயரில் உள்ள கிரைய ஆவணத்தின் சான்றிட்ட நகல் (ஆவண எண்.711/1946)
3. 27.02.1956 தேதியிட்ட நஞ்சப்பகவுண்டர் பெயரில் உள்ள கிரைய ஆவணத்தின் சான்றிட்ட நகல் (ஆவண எண். 159/1956)
4. 26.09.1979 தேதியிட்ட சென்னியப்பன், சின்னசாமி, ராமசாமி ஆகியோருக்கிடையேயான பாகசாசன ஆவணத்தின் சான்றிட்ட நகல் (ஆவண எண்.1486/1979)

5. 20.01.2012 தேதியிட்ட வாதியின் முன்கிரையதாரரின் முன்கிரையதாரரான K.C.H.முருகன் பெயரில் உள்ள கிரைய ஆவணத்தின் சான்றிட்ட நகல். (ஆவண எண்.988/2012)

6. 08.05.2012 தேதியிட்ட வாதியின் முன்கிரையதாரரின் முன்கிரையதாரரான K.C.H.முருகன் பெயரில் உள்ள கிரைய ஆவணத்தின் சான்றிட்ட நகல். (ஆவண எண்.8546/2012)

7. 22.11.2012 தேதியிட்ட வாதியின் முன்கிரையதாரரான ரவீந்தர் பெயரில் உள்ள கிரைய ஆவணத்தின் சான்றிட்ட நகல் (ஆவண எண். 17559/2012)

8. 22.11.2012 தேதியிட்ட வாதியின் முன்கிரையதாரரான ரவீந்தர் பெயரில் உள்ள கிரைய ஆவணத்தின் சான்றிட்ட நகல் (ஆவண எண். 17560/2012)

ஆகியவற்றை பிரதிவாதிகள் தரப்பு ஆவணங்களாக குறியீடு செய்ய வேண்டுகிறேன். மேற்படி ஆவணங்கள் முறையே **பி.வா.சா.ஆ.1 முதல் பி.வா.சா.ஆ.8** ஆவணங்கள் ஆக குறியீடு செய்யப்படுகின்றன.

**வாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.**

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

V KALIDASAN

Digitally signed by V KALIDASAN
Date: 2025.08.01 18:21:02 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,

பல்லடம்.